RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# சிவப்பிரகாசர் காட்டும் உழவும் உணவும்

இரா. மணிமேகலை [அ, *]

[அ] தமிழ்த்துறை, கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்-29, தமிழ்நாடு, இந்தியா.

# Cultivation and food shown by Sivaprakasar

R. Manimegalai [a, *]

[a] Department of Tamil, Kongunadu Arts and Science College, Coimbatore-29, Tamil Nadu, India

* Corresponding Author: manimegalai.cpr@gmail.com

Received: 03-04-2024
Revised: 13-06-2024
Accepted: 27-06-2024
Published: 02-08-2024

Check for updates

**ABSTRACT**

An anthropologist who writes the history of mankind would have first thought of how the human race would have started to produce food in the ancient times. When man began to learn agricultural techniques for food, his culture underwent a great upheaval. Mankind may have reached the period of civilized agriculture when the land was cultivated and produced through proper tillage. Then food gathering became a business. After learning to write about those activities and the plowing tools required for farming, man began to record them in literature. Imaginary Repository Sivaprakasar AD Vira was a Saivite saint who lived in the 17th century. He appeared in Kanchipuram and has authored 33 books in Tamil. His books are known as Sivaprakasa Swamikal Banuval Akrutu. In one of the songs he composed, he imagined the Gods conversing about the agricultural industry which is the basis of food production. He composed the song as if Umayammi was giving advice to Pitchatanar, one of Shiva's arul kolams. This song explains how Shivabran and Umaiyan explore how to start food production by using the weapons and objects of other deities as agricultural tools like land, seed paddy, plough, dice, fat and yoke.

**Keywords:** Food Production, Food Gathering, Sivaprakasar

## முன்னுரை

சிவம் பெருக்கும் சீலராகவும் அருள் பழுத்த நெஞ்சினராகவும் விளங்கிய தவத்திரு சிவப்பிரகாச சுவாமிகள் கி.பி.17 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சிவஞானியாவார். பல்வேறு செந்தமிழ்ப் பனுவல்களை அளித்து "கற்பனைக் களஞ்சியம்" என்று போற்றப்படும் சிவப்பிரகாச சுவாமிகளை, "நன்னெறிச் சிவப்பிரகாசர்", "துறைமங்கலம்சிவப்பிரகாசர்".,"கவி சர்வ பௌமர் "என்னும் பெயர்களிலும் அழைப்பர்.

வீர சைவத் துறவியாக விளங்கிய சுவாமிகள் பிரமசரிய நிலையிலிருந்து நேரடியாகத் துறவறம்பூண்டவர் ஆவார். தம் தம்பியர்கள் வேலையர், கருணைப் பிரகாசர் ஆகியோர்க்கு அவர்கள் விருப்பப்படி திருமணம் செய்து வைத்தார். அவர்தம் இல்லறம் சிறக்க மணமக்களை வாழ்த்திப் பாடிய கவிதைகளாக ஐந்து பாடல்கள் அவரது வரலாற்றில் கிடைக்கின்றன. அப்பாடல்கள் தனிப்பாடல்களாக நூல்களில் இடப்பெற்றுள்ளன.

அப்பாடல்களைப் பயில்வோர்க்கு நகை மொக்கு பூக்கும் படியாகக் களி நயமுடன் இறைவன் இறைவியின் உரையாடலாக அமைத்துள்ளார்.மிகுந்த சுவையுடைய இப்பாடல்களில் ஒன்று உலகியலில் கணவன் மனைவிக்கிடையே நடைபெறுகின்ற ஆலோசனைப் பேச்சு போன்று உள்ளது. அதில் குடும்ப வாழ்க்கைத் தேவைக்குப் பொருள் தேடும் முறையைப் பற்றி மலையரசன் மகளாகிய

உமையன்னை தன் கணவன் இறையவரிடம் அறிவுரை கூறுகின்றாள்.இரந்து (பிச்சை எடுத்து) வாழும் வாழ்க்கையை விட்டு உழுது உண்டு வாழும் வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும் என்கிறாள்.

பிச்சாடனர் என்றும் பலிதேர் பிரான் என்றும் ஐயங்கொள் பெம்மான் என்றும் போற்றப்படுவது சிவபெருமானின் பிச்சையேற்கும் வடிவிலமைந்த திருக்கோலம் ஆகும். இது அறுபத்துநான்கு சிவமூர்த்தங்களுள் ஒன்றாகும்.இக்கோலம் தாருகாவன முனிவர்கள் ஆணவத்தினை அழிப்பதற்காக சிவனார் எடுத்த மிக அழகிய கோலமாகும். இவ்வடிவில் ஈர்க்கப்பட்டு மணிவாசகப் பெருமான் "பிச்சை தேவா" என்று அழைக்கின்றார். சோழர் காலக் கல்வெட்டுகளும் இவரைப் "பிச்சதேவர்" என்கின்றன.

ஆணவ அழுக்கடையும் ஆவியை விளக்கி அநுபூதி நிலையை எட்டுவதற்கு வணங்க வேண்டிய திருக்கோலம் பிட்சாடனார் வடிவம் ஆகும்.ஆனால் உமையவளோ இப்பாடலில் பிச்சை எடுத்து வாழும் வாழ்க்கையை இத்தோடு நிறுத்திக்கொள்ளுமாறு தன்கணவர்க்கு புத்திமதி கூறி உரையாடுகின்றாள்.உழுது பயிரிட்டு உணவு உற்பத்தி செய்வதற்கான வழிமுறைகளை அடுக்கி உரைக்கின்றாள்.உலகிலுள்ள உயிரினங்கள் தத்தமது உடலியல் அமைப்புக்குத் தகுந்தாற் போல உணவைத் தேடியும் பெற்றும் உட்கொண்டும் பசியை நிறைவு செய்து கொள்கின்றன. இத்தகைய உயிரினங்களை நீர் உறிஞ்சிகள், பயிர் உண்ணிகள், ஊன் உண்ணிகள் என மூவகைப்படுத்துவர் உயிரியல் ஆய்வாளர்கள். மேற்குறித்த மூவகைப்பட்ட உணவு முறைகளையும் ஒருங்கே உட்கொள்ளும் உண்ணியாகத்தான் மனித இனம் பரிணமித்திருக்கிறது. அதாவது, இந்த மூவகை உணவு முறைகளை உண்டு பரிணாமச் சுழற்சியிலும் வளர்ச்சியிலும் முன்னேறிய வளர் நிலைகளை அடைந்திருப்பது மனித இனம் மட்டும் தான்.

இத்தகைய மனித இனத்திற்கும் மற்ற உயிரினங்களுக்கும் உள்ள மிகக் குறிப்பிடும்படியான வளர்ச்சி என்பது, உணவு உற்பத்தி நிலைதான். மனித இனம் மட்டும் தான் தமது உணவுத் தேவையைத் தாமே தேடிக் கொள்வது மட்டுமல்ல, தாமே உற்பத்தி செய்யவும் தொடங்கியது. உணவைப் பெறுவதுதான் மனிதரது முதல் தேடலாக அமைந்திருக்கிறது. இந்த உணவுத் தேடலுக்கும் உற்பத்திக்கும் பல முறைகளும் கருவிகளும் பயன்பட்டு வந்திருப்பதை வரலாற்றின் ஊடாக அறிய முடியும். உழவு என்ற ஒரு சொல் உழுகின்ற மனிதர், உழவுப்பகடு, உழுங் கலப்பை, உழவுநிலம்என்று ஒட்டு மொத்தமாய் ஒரு செயலை அடையாளப்படுத்தி நின்றது.

இத்தகைய உழவுத் தொழில், முதலில் முல்லை நிலத்திலேயே தொடங்கிற்று என்பார் அறிஞர் பாவாணர். காடாகிய முல்லை நிலத்திலேயே உழவு தோன்றிற்று. அது மருத நிலத்தில் சிறப்படைந்தது. முன்னதில் புன்செய் பயிரும், பின்னதில் நன் செய் பயிரும் விளைவிக்கப்பட்டன.வேட்டைச் சமூக நிலையிலிருந்து மாறி உணவு உற்பத்திக்கான இடமாக நிலத்தை அறிந்த பிறகு மனித இனத்தின் பண்பாட்டில் மாபெரும் அசைவு ஏற்பட்டது.

இனி மீண்டும் நாம் சிவப்பிரகாச சுவாமிகளின் பாடலைக் காண்போம். உழவுத்தொழில் செய்து வாழலாம் என்றவுடன் உழவுக்குத் தேவையான பொருள்களை யாரிடம் பெறலாம் என்று சிவபிரானிடம் கலந்து பேசி முடிவு செய்கிறாள் அன்னை.

"அச்சுதன் அளிப்பன் நிலம்;

உமது நேயன் வித்தை

அருளுவன் பல பத்திரன்

அலம் உதவுவன்; எமன்பகடு ஈவன் நந்தமக்கு

ஆனதோர்எருதும் உண்டே

முச்சிர அயில் படையினைக் கொழுவதாக்குவோம்;

மொய்ம்புடன் இழுத்து இறுக்க

முந்திய வடக்கயிற்றுடன் மற்றும்

நமது அன்பர்

முன் போய் இரந்து கொள்வோம்

இச்சையுடன் நமது இளைய

தனையனாகிய கந்தன்

இனிமையொடு மாடு மேய்ப்பன்

இனி உழுது பயிரிடுதல் நன்று நன்று; இதை விட்டு

இரந்து உண்பது ஈனம் எனவே

கச்சு முலை மாது உமை உரைத்திடும் புத்தியைக்

கைக்கொண்டு உளத்தில்

இது நல்

காரியம் எனக் கருதி மெத்தக்களித்திடும்

கண்ணுதல் உமைக் காக்கவே" (சிவப்பிரகாசர் தனிப்பாடற்றிரட்டு, பா.4)

உழவுத்தொழிலைச் செய்து வாழ்வை நடத்தலாம் என்று முடிவு செய்தவுடன்பயிரிடத் தேவையான உழவுக்கருவிகள் குறித்து சிந்தித்தாள்.

1 நிலம்
2 விதை நெல்
3 3.உழு கலப்பை
4 4.உழுபகடு
5 5.உழு கலப்பையின் கொழு
6 6.நுகத்தடிக்கயிறு.
7 7. எருது மேய்க்கும் சிட்டாள்

எனும் பொருள்கள் தேவைப்பட்டன.இவற்றை யாரிடமிருந்து பெறலாம் என்றும் தங்களிடம் உள்ள பொருள்களை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதைப் பட்டியலிட்டுக் கூறுகின்றாள் உலகன்னை.

## அச்சுதன் அளிப்பன் நிலம்

வாமன அவதாரத்தில் மாபலி அரசனிடம் மூவடி மண் கேட்டு ஈரடியாலே அளந்தவன் திருமால்.விண்ணும் மண்ணும் அளந்த திருவடி உடையவன். "ஓங்கி உலகளந்த உத்தமன்" என்பாள் ஆண்டாள் பிராட்டி. விண்ணளந்த திரி விக்கிரமமூர்த்தியின் திருமேனியழகைப் பாடுவது எப்போதும் நாச்சியாரது பாசுரப் பழக்கம்.போதாதற்கு இளம் பருவத்தில் மண்ணையே உண்டவன் மாயவன்."உலகுண்ட வாயன்" என்று தமிழ் இலக்கியம் சுட்டும்.எனவே காடும் காடு சார்ந்த இடத்தையும் உடைய முல்லைத் திணைக் கடவுளாகிய திருமாலிடம் மண் கேட்பது பொருத்தம் என்று கருதுகிறாள் அம்பிகை. மேலும் அவள் தன் சகோதரனிடம் சொத்தாக நிலம் கேட்டுப் பெறுவது முறைதானே. எனவே வேளாண்மை செய்வதற்குரிய நிலத்தைத் தன் அண்ணன் அச்சுதனிடம் பெறலாம் என்கிறாள்.

## குபேரனிடம் விதை நெல் பெறலாம்

இந்து தொன்மவியலின் அடிப்படையில் குபேரன் செல்வத்தின் அதிபதியாவார். இவருக்கு இராவணன், கும்பகர்ணன், விபீஷணன் என்ற ஒன்று விட்ட சகோதர்களும், சூர்ப்பனகை என்ற

சகோதரியும் இருந்தாகவும் காட்டப்படுகிறது. மேலும், இவருக்கு சித்திரலேகா என்ற மனைவியும், இத்தம்பதிகளுக்கு நளகூபன், மணிக்ரீவன் என்று இரண்டு மகன்களும் உண்டு.

சிறந்த சிவபக்தரெனவும், சிவனுடைய இனிய நண்பரெனவும் கூறப்படும் குபேரன் வடக்கு திசை அதிபதியாகவும் எண் திசைப் பாலகர்களில் ஒருவராகவும் போற்றப்படுகிறார். இவரது இருப்பிடத்தை அளகாபுரி என்பர். அளகை வேந்தனாகிய குபேரன் சிவபிரானின் தோழர் என்று பொருள் கொள்ளும் படியாகச் "சிவசகா" என்ற பெயரும் குபேரனுக்கு உண்டு. திருவிசைப்பாவும் "தனன் தன் தோழா" என்று பாடுகின்றது.சிவபெருமானைக் குறித்து 800 வருடங்கள் கடும் தவமியற்றி அவரது நட்பினைப் பெற்றதாகப்புராணங்கள் கூறுகின்றன.

சிவபக்தனான குபேரன் தன்னுடைய சிவவழிபாட்டால் வடதிசைக்கு அதிபதியானார்.சிவபக்தியின் காரணமாக சிவபெருமான் சுவர்ண பைரவராக குபேரனுக்குச் செல்வத்தினை நிர்வகிக்கும் பொறுப்பினைத் தந்தார்.இவரிடம் விதை நெல்லைப்பெற்று நிலத்தில் விதைப்பது பொருத்தமானது என்கிறாள் அன்னை.

விதை நெல் என்பது அடுத்த வேளாண்மைப் பயிர்க்கான கருவினைச் சேகரித்து வைப்பது போன்றது. தனித்த வளமான மண்ணில் விதைக்கான தானியத்தைச் செழிப்பாக வளர்ப்பார்கள். ஒன்றுக்கு நான்கு முறை நன்கு களை எடுத்து ரசாயனம் பயன்படுத்தாமல் வேறு இனம் கலந்துவிடாமல் ஒரே ரகமாகப் பசுங்குழந்தை போல் வளர்ப்பார்கள்.பின்பு கையாலேயே கதிர் அடித்து எடுத்து வேப்பிலை இட்டுப் பத்தாயத்தில் (குதிர்) வைப்பார்கள். அடுத்த வேளாண்மைக்கான விதை நெல்லை இவ்வாறு தான் சேகரிப்பர். சிவராத்திரியன்றுதான் விதை நெல்லைச்சேமிப்புக்குரிய கலன்களில் முதன்முதலாக இடுவது மரபு.தனதானியங்களை நிர்வகிக்கும் அளகேசனாகிய குபேரனிடம் விதை நெல்லை வாங்கி வந்து வேளாண் நிலத்தில் விதைக்கலாம் என்கிறாள் அம்பிகை.

## பலராமன் கலப்பைதருவார்

கலப்பை - மண்ணைத் தோண்டி நிலத்தை உழப் பயன்படுத்தும் வேளாண்மைக் கருவி கலப்பை ஆகும்.இக்கருவியை நிலத்தின் மீது அழுத்திப் பிடித்துக்கொண்டு இழுக்கச் செய்தால், கீழ்மண் மேலாக வருமாறு கிளறப்படுவது மட்டுமல்லாமல், விதை முளைக்க ஏதுவாக மண் இறுக்கம் (கெட்டிப்பு) குறைவாக மாறும்படிச் செய்யவும் உதவும். கலப்பையை ஏர் அல்லது ஏர்க்கால் என்றும் கூறுவர்.

உழவுக்குத் தேவைப்படும் கலப்பையை பலராமனிடம் பெறலாம் என்கிறாள் அன்னை.பலராமன் கலப்பையைத் தாங்கி இருந்தாலும் போரில் கௌமோதகி என்ற கதாயுதத்தையே முதன்மையாகக் கொண்டார். பலராமன், பீமனுக்கும் துரியோதனனுக்கும் கதாயுத ஆசானாவார்.வேளாண்மைக்கு அடிப்படையான உழு கருவியாகிய கலப்பையை ஆயுதமாகக் கொண்ட பலராமர், உறவுமுறையில் கிருஷ்ணரின் சகோதரர் ஆவார்.கிருஷ்ணரின் தந்தை வசுதேவரின் முதல் மனைவி ரோகிணியின் வயிற்றில் உதித்தவர். இவரை 'பலதேவன்', 'பலபுத்திரன்', 'கதாயுதன்' என்று போற்றுவர். உழவுத் தொழில் செய்வதற்குத் திருமால் அளித்த வேளாண்மை நிலத்தில் உழுவதற்குத் திருமாலின் அவதாரங்களில் ஒன்றாகிய பலராமன் தன் கலப்பையைத் தந்து உதவுவார் என்கிறாள் அம்பிகை.

## உழு பகடு எமனிடம் பெறலாம்

உழவுத் தொழிலைச் செய்வதற்குக் கலப்பைப் பூட்டி ஏர் ஓட்ட வேண்டும். ஏர் ஓட்டுவதற்கு உழவு மாடுகள் அல்லது எருதுகள் வேண்டும்.அம்பிகை உழவுக்கான எருமையை எமனிடமிருந்து பெறலாம் என்கிறாள். சோடி எருமைகளைப் பயன்படுத்தி ஏர் பூட்டவேண்டும் என்பதால் தன் கணவன் சிவபிரான் வாகனமாகிய தரும விடையாகிய ரிஷபத்தையும் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று சிந்திக்கின்றாள். சிவபிரனின் ஊர்தி, காளையாகிய நந்தியாகும்.இத் தரும விடை பக்குவம் வாய்ந்த ஆன்ம வருக்க உயிர்களைக் குறிக்கும்.

இரும்பினால் ஆன உழு கருவிகள் கண்டுபிடிக்கப்பட்ட பின்பு, உழவை அடிப்படையாகக் கொண்ட வேளாண் தொழில் பக்குவப்படத் தொடங்கியிருக்கிறது. அதிலும் குறிப்பாக, மாடுகளைப் பழக்கப்படுத்தி வேளாண்மையில் ஈடுபடுத்திய போதுதான், மனித சமூகம் தம்மை நிலை நிறுத்திக் கொண்டது. அதனோடு, பண்பட்ட ஒரு தொழிலாக வேளாண்மை அமைந்தது. மேலும், மனித சமூகம் நாகரிக வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கு மாடுகளின் பங்கேற்பும் உழைப்பும்தான் பெரிதும் துணை நின்றுள்ளன.எனவே, தன் கணவரின் விடை வாகனத்தையும் எமராசனின் எருமைவாகனத்தையும் சோடி எருதுகளாக ஏரில் பூட்டலாம் என்னும் சிறந்த அறிவுரையைத் தெரிவிக்கின்றாள்.

## திரிசூலமே கொழு

கொழு என்பது கலப்பையில் பொருத்தி மண்ணைக்கீறி உழும் இரும்பு உலோகம் ஆகும்.மரக்கலப்பையில் பொருத்தப்பட்டிருக்கும் கொழுவானது மண்ணைத் தங்குதடையின்றித் திருப்பிப் போடுகிறது. கலப்பை உழும் ஆழத்திற்கு ஏற்றவாறு கொழுவை மாற்றி வைக்க வேண்டும்.கொழு வேண்டுமே! என்ன செய்யலாம்? என்று யோசித்த அம்பிகை இறைவனின் திருக்கரத்தில் விளங்கும் முத்தலைச் சூலம் எனப்படும் திரிசூலத்தையே பயன்படுத்திக் கொள்ளலாம் என்கிறாள்.

சிவபெருமானுக்குரிய படைக்கலங்களுள் முதன்மை பெற்றது சூலமாகும். அது தலைப்பகுதியில் மூன்று கூர்மையான பகுதிகளைக் கொண்டிருப்பதால் முத்தலைச் சூலம் என்றும் திரிசூலம் என்றும் அழைக்கப்படுகின்றது.சூலத்தை ஏந்தி நின்று அருள்புரிவதால் சிவபெருமான் சூலபாணி என்றும், சூலதரர் என்றும் அழைக்கப்படுகிறார். திரிசூலம், உயிர்களைப் பற்றியுள்ள ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களை நீக்கி ஞானத்தை வழங்கி மோட்சத்தை அருள்வதின் குறியீடாக உள்ளது. அஸ்திரங்களுக்கு எல்லாம் தலைவனாக இருப்பதால் அதனை அஸ்திர ராஜன் எனவும் அழைப்பர்

## வடக்கயிறே நுகத்தடிக்கயிறு

மாடுகளை இணைப்பதற்காக, நுகத்தடியில் உள்ள துளைகளில் ஒரு கயிறு மாட்டப்பட்டு இருக்கும்.கலப்பை உயரத்திற்கேற்றவாறு கயிறைப் பொருத்திக்கொள்வர். இதனைப் பூட்டாங்கயிறு என்றும் நுகத்தடிக் கயிறு என்றும் அழைப்பர்.இறைவன் இறைவி கொலுவீற்று திருவீதி உலா வரும் தேரின் வடக்கயிறு நல்ல வலுவுள்ளது. அன்பர்கள் தம் அன்பினால் அந்தத் தேரினை இழுத்து வருவர்.அந்த வடக்கயிறினைத் தம்முடைய அடியார் பெருமக்களிடம் இரவலாக வாங்கிக் கொள்ளலாம் என்று அம்பிகை அன்புடன் செப்புகின்றாள். உழவுத் தொழிலுக்குத் தேவையான உதவிகளை தெய்வங்களிடம் மட்டுமின்றி அடியார்களிடமும் பெற விரும்புகிறாள் அன்னை.

## வேலவனே பண்ணையாள்

உழவு எருதுகளை முறையாக மேய்ச்சலுக்கு அழைத்துச் செல்லவேண்டும். அவற்றுக்குப் பிடித்தமான சத்துள்ள உணவினை அன்புடன் தர வேண்டும். காலாற நடந்து வயிறாற புல் மேய்ந்து வந்தால் கால்நடைச் செல்வம் பூரித்து வளரும்.எருதுகளை மேய்ப்பதற்கு ஆள் வேண்டுமே? என்று இறைவன் கேட்டார். அதற்கு "நம்முடைய இளைய பிள்ளை கந்தன் காடுகளில் சுற்றுவதில் மிகவும் பிரியமுடையவன்.அவன் மிகவும் இச்சையுடன் எருதுகளை மேய்த்து வருவான்" என்று உமை விடை பகன்றாள்.

இவ்வாறு தங்கள் வாழ்வில் மேற்கொள்ள வேண்டிய தொழில்முயற்சிகளைப் பற்றி இருவரும் சேர்ந்தே முடிவு செய்தனர். இறைவனின் வாக்கே நோக்கிய மங்கையாகிய உமையம்மை தன்னிடம் கூறுகின்ற புத்திமதிகளைத் தயக்கமின்றி ஏற்றுக்கொண்டார் நித்த மணாளர்.

## முடிவுரை

உழைப்பதற்குச் சுணக்கம் காட்டாமல் தம்மிடம் இருப்பதை ஆராய்ந்து பார்ப்பதுடன் உறவினர் மற்றும் நண்பர்களிடம் பெற வேண்டிய பொருள்களைப் பயன்படுத்திக்கொள்வதில் தவறில்லை என்றும் கூறுகின்றாள். உணவு உற்பத்திக்கான அடிப்படைப் பணிகளை அனைவரும் மேற்கொள்ளும் வழிமுறைகளையும் அம்மை அறிவுரையாகத் தருகின்றார். பிச்சை எடுத்து உண்பது இழிவு; உழைத்து உண்பதே உயர்வு என்று மனைவி கூறும் அறிவுரையைக் கணவனும் ஏற்கிறார். இல்லற முடிவுகளில் மனையாளின் சிந்தனை பொருத்தமாக இருப்பின் அதை ஏற்பதில் தயக்கம் காட்ட வேண்டியதில்லை. இப்பாடல் புராணச் செய்திகளின் அடியொற்றி எழுந்த அழகிய கற்பனையால் விளைந்தது என்றாலும் உலகியலில் இல் வாழ்வார்க்குத் தேவையான அறிவுரைகளைத் தருகின்றது. இறைவன் இறைவியை வேளாண் மாந்தர்களாகச் சிவப்பிரகாச சுவாமிகள் காட்டுவது திருப்பேரூர் திருத்தலத்தில் நடைபெறும் நாற்று நடவுத் திருவிழாவை நினைவூட்டிக் களிப்படைய வைக்கின்றது. அத்தலத்தில் பங்குனி உத்திரத்தன்று பட்டி நாயகனாரும் பச்சை நாயகித் தாயரும் வேளாண் மாந்தர்களாகிய பள்ளன் பள்ளியாக நிலத்தில் உழவுத்தொழிலை நடத்துகின்ற திருவிழா வருடந்தோறும் வெகு விமர்சையாக நடைபெறும். உழவினால் கிடைத்த உணவு மனித இனத்தின் மாபெரும் கண்டுபிடிப்பு என்பதை இப்பாடலால் உணர முடிகிறது.

## References

சிவப்பிரகாச சுவாமிகள் பனுவல் திரட்டு, சு.இராமசாமிப் புலவர், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை 1978

சிவப்பிரகாசர் செந்தமிழ் நூல்கள், மயிலம் பொம்மபுர ஆதீன வெளியீடு, ஸ்ரீ சண்முக அச்சுக்கூடம், திருப்பாதிரிப்புலியூர் 1944, தனிப்பாடற்றிரட்டு (மூலம்)

பி. நா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ், வித்தியா ரத்நாகரம் பிரஸ், சென்னை 1940

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2024. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License